# நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை : திரு ஞா. நாகராஜன், B.E., AITP., MBA., B.G.L.,**

ந.க. எண் 7027/2018 திலிம 3 நாள் 10.11.2018

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - திருநெல்வேலி மண்டலம் - திருநெல்வேலி மாவட்டம்- சேரன்மகாதேவி பேரூராட்சி- அம்பாசமுத்திரம் வட்டம் - சேரன்கோவில்பத்து கிராமம் - சர்வே எண் 195/2, 3 pt-ல் 4 ஏக்கர் (16193.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

படிக்க :

1. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017
3. அரசாணை எண் 55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துற்ற, நாள் 02.05.2018
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.ஏண் 13193/17 எல் ஏ 2, நாள் 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017
5. மனுதாரர் திரு ஜே. விஜய் என்பவரது விண்ணப்பம் நாள் 24.10.2018

---

**உத்தரவு :**

பார்வை 1, 2 மற்றும் 3-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 4-ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், பார்வை 5-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம்வட்டம், சேரன்மகாதேவி பேரூராட்சி, சேரன்கோவில்பத்து கிராமம், சர்வே எண் 195/2, 3 pt-ல் 4 ஏக்கர் (16193.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ (மு)/ம.(திலி) **எண் 440/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - 16193.00 சமீ |
| மனைகளின் மொத்த எண்ணிக்கை | - 77 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - 10 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | - 1 to 5, 14 to 18 |

(9)

| | |
|---|---|
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | - 67 |
| விற்கப்படாத மனை எண்கள் | - 6 to 13, 19 to 77 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | - 10026.00 சமீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | - 1203.00 சமீ (12.00%) |

பூங்கா 1 பரப்பு - 1203.00 சமீ

## செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்

### 1. பரிசீலனைக்கட்டணம்

| | | |
|---|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக்கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | : | மனை எண் .6, 23<br>ரூ.1000/- |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்

### 2. வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்

ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30- வீதம் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.75- வளர்ச்சிக்கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்

**அ. வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு**

0217 Urban Development – 60 Other Urban Development Scheme-800.Other receipts AT
Receipts under Regularisation charges of Unapproved layout and Plots –DTCP
27 Non Taxation Fees – 30 Regularisation
(DPC 0217 60 800 AT 2730)

ஆ. வளர்ச்சிக்கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக்கணக்கில் நேரில் செலுத்தலாம்.
வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் --------------------------

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னர் சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 13.10.2017-ல் விதி எண் 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
திருநெல்வேலி - 5.

10.1.18
10.11.18

இணைப்பு
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

பெறுநர்
செயல் அலுவலர்
சேரன்மகாதேவி பேரூராட்சி
திருநெல்வேலி மாவட்டம்

நகல்

1. திரு ஜே. விஜய், 13, 3வது கிழக்கு தெரு, சேரன்மகாதேவி, திருநெல்வலேி - 627 414 (செயலாணை மட்டும்)
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருநெல்வேலி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு)
3. சார்பதிவாளர், சேரன்மகாதேவி, திருநெல்வேலி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு)
4. தொழில் நுட்ப வைப்பறை

(11)

தேர்வுநிலை பேரூராட்சி
சேரன்மகாதேவி
நாள். 28.02.2019

ந.க.எண்.100–1 /2018

## குறிப்பாணை

**பொருள்** : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் – திருநெல்வேலி மாவட்டம்– சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சி –சேரன்கோயில்பத்து கிராமம் – புல எண். 195/2,3ptல் அமைக்கப்பட்ட 16193 ச.மீ (4 ஏக்கர்) பரப்பளவு மற்றும் 77 மனைகள் கொண்ட அங்கீகரிக்கப்படாத காலியிடத்தில் – கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைகளில் விற்பனை செய்யப்பட்ட மனைகள் (பரப்பளவு –1912.165 ச.மீ) – 10 மனைகளை வரன்முறைப்படுத்துவது – தொடர்பாக.

**பார்வை** :

1) திருநெல்வேலி மண்டல நகர ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க எண். 7027/2018/திலிம3 நாள். 10.11.2018
2) சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க எண்.100/2018 நாள்.21.02.2019
3) மனுதாரர் திரு.கா.ரஹ்மத் பீவி மற்றும் திரு.அ.அமீர்கான் ஆகியோர்களின் விண்ணப்பம் நாள். 25.02.2019.
4) தொடர்புடைய ஆவணங்கள்.

********

திருநெல்வேலி மண்டலம்,திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சி பகுதிக்குட்பட்ட சேரன்கோயில்பத்து கிராமம், புல எண்.195/2,3 pt–ல் அமைந்துள்ள 16193 ச.மீ பரப்பளவினை (77 மனைகள்) கொண்டுள்ள அங்கீகரிக்கப்படாத அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1ல் காணும் நகர ஊரமைப்பு துணை இயக்குநர் திருநெல்வேலி மண்டலம் அவர்களின் நடவடிக்கைகளின் படி ம.வ (மு)/ம (திலி) எண்.440/2018 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில் பார்வை 2ல் காணும் இவ்வலுவலக செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகளின் படி அடியிற்காண் விபரப்படி 67 மனைகள் மட்டும் உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனைப்பிரிவு பரப்பு | – 16193.00 சதுர மீட்டர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | – 77 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | – 10 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் எண்ணிக்கை | – 67 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் விபரம் | – 6 முதல் 13 முடிய, 19 முதல் 77 முடிய |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பு | – 10026.00 ச.மீட்டர் (107919.90 ச.அடி) |
| பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட (பூங்கா) இடம் (10026 x 12% =1203.12) | – 1203.00 ச.மீட்டர் |

| வ.எண் | விபரம் | தொகை ரூபாயில் | குறிப்பு | வரைவோலை எண் | செ.சீ எண்/நாள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | மனைப்பிரிவு கூர்ந்தாய்வு கட்டணம் (ஒர் மனைக்கு 500 வீதம் 65 மனைக்கு) | 32500 | செயல் அலுவலர் சேரன்மகாதேவி பேரூராட்சி என்ற முகவரிக்கு வரைவோலை மூலம் செலுத்தப் பட்டுள்ளது | 869813/19.02.2019 இந்தியன் வங்கி, சேரன்மகாதேவி | Adjustment Triplicate Challan No. 141/2018-19 நாள்.20.02.2019 |
| 2 | வரன்முறை கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ.30/— வீதம் 10026.00 சதுர மீட்டருக்கு | 300780 | அரசு தலைப்பு **( D.P code - 0217-60-800-AT - 2730)**ல் செல்லான் மூலம் செலுத்தப்பட்டுள்ளது | — | - |
| 3 | வளர்ச்சி கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ.75/— வீதம் 10026.00 சதுர மீட்டருக்கு | 751950 | செயல் அலுவலர் சேரன்மகாதேவி பேரூராட்சி என்ற முகவரிக்கு வரைவோலை மூலம் செலுத்தப் பட்டுள்ளது | 869811/19.02.2019 இந்தியன் வங்கி, சேரன்மகாதேவி | Adjustment Triplicate Challan No. 139/2018-19 நாள்.20.02.2019 |
| 4 | காலிமனை வரி 10026x10.76=107880.00 ச.அடிக்கு x 0.2 ரூ.21576 x 13 (பதிமூன்று அரையாண்டுக்கு) | 280500 | செயல் அலுவலர் சேரன்மகாதேவி பேரூராட்சி என்ற முகவரிக்கு வரைவோலை மூலம் செலுத்தப் பட்டுள்ளது | 869812/19.02.2019 இந்தியன் வங்கி, சேரன்மகாதேவி | Adjustment Triplicate Challan No. 140/2018-19 நாள்.20.02.2019 |
| | மொத்தம் | 1365730 | | | |

இந்நிலையில் மேற்படி பார்வை 2ல் காணும் இவ்வலுவலக நடவடிக்கைகளில் நிபந்தனை எண்.8ல் விற்பனை செய்யப்பட்ட 10 மனைகளை (1 முதல் 5 முடிய), (14 முதல் 18 முடிய ) உரிய விதிமுறைகளை பின்பற்றி வரன்முறை செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பார்வை 3ல் காணும் விபரப்படி மேற்காண் விற்பனை செய்யப்பட்ட மனைகளின் உரிமையாளர்கள் மேற்படி விற்பனை செய்யப்பட்ட மனைகளை வரன்முறை செய்திட சம்மதம் தெரிவித்ததுடன் இணைப்பில் காணும் விபரப்படி அதற்குரிய கட்டணங்களை வரைவோலை மற்றும் கருவூலக செல்லான் மூலம் செலுத்தப்பட்டதின் அடிப்படையில் மேற்படி விற்பனை செய்யப்பட்ட 10 மனைகள் (1 முதல் 5 முடிய, 14 முதல் 18 முடிய ) வரன்முறைப்படுத்துவதுடன் பார்வை 2ல் காணும் இவ்வலுவலக நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை எண்.8 ஆனது தளர்த்தப்பட்டுள்ளது என்ற விபரமும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி
சேரன்மகாதேவி
21/2/24.

பெறுநர்

1) திருமதி.கா.ரஹ்மத் பீவி, க/பெ.சின்ன மைதீன், 40எ, காதர் மீரான் தெரு, பத்தமடை
2) திரு.அ.அமீர்கான், த/பெ.அப்துல் ரசாக், 12—1, பள்ளிவாசல் தெரு, சேரன்மகாதேவி

நகல் :

1) திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2). மண்டல துணை இயக்குநர், நகர ஊரமைப்பு துறை, திருநெல்வேலி அவர்களின் தகவலுக்காக.
3) சார் பதிவாளர், சேரன்மகாதேவி, திருநெல்வேலி மாவட்டம் அவர்களின் தகவலுக்காக.